# ஊழியர்கள் போராட்டம், 'வாபஸ்'

## மெட்ரோ சேவையில் பிரச்னை இல்லை

சென்னை, மே 2–

மெட்ரோ ரயில் ஊழியர்கள் வேலை நிறுத்தம், நேற்று இரவு, 'வாபஸ்' பெறப்பட்டது.

சென்னை விமான நிலையம் – வண்ணாரப்பேட்டை, பரங்கிமலை – சென்ட்ரல் இடையே, மெட்ரோ ரயில் இயக்கப்படுகிறது.

மெட்ரோ ரயில் ஊழியர்கள், சங்கம் துவங்கியதால் பிரச்னை ஏற்பட்டது. சங்க நிர்வாகிகள் எட்டு பேரை, நிர்வாகம் பணி நீக்கம் செய்தது.

இந்நிலையால், இரண்டு தினங்களாக, மெட்ரோ ரயில் போக்குவரத்தில் பாதிப்பு ஏற்பட்டது. ரயில் இயக்கத்தை சீராக்க, நிர்வாகம் முயற்சிகள் மேற்கொண்டது.

ஊழியர்களின் போராட்டத்திற்கு தீர்வு காண, நேற்று முன்தினம், சென்னை குறளகத்தில், முத்தரப்பு பேச்சு நடந்தது. முடிவு எட்டப்படாததால், நேற்றும் போராட்டம் தொடர்ந்தது.

இதனால், நேற்று மெட்ரோ ரயில்கள் இயக்கம் பாதிக்கப்படும் நிலை இருந்தது. ஆனால், மெட்ரோ ரயில் போக்குவரத்து, நேற்று காலை வழக்கம்போல் இருந்தது.

தனியார் ஒப்பந்த ஓட்டுனர்களை கொண்டு, ரயில்கள் இயக்கப்பட்டன.

இளநிலை பொறியாளர்கள், நிலைய கட்டுப்பாட்டாளர்கள், தொழில்நுட்ப ஊழியர்கள், நேற்றும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதால், இவர்களுக்கு பதிலாக, ஒப்பந்த நிறுவன பணியாளர்களை கொண்டு, நேற்று நிலைமை சமாளிக்கப்பட்டது.

இந்நிலையில், 'மெட்ரோ ரயில் சேவை, எக்காரணம் கொண்டும் பாதிக்காது. வழக்கம்போல் இயங்கும்' என, நிர்வாகம் அறிவித்தது.

இதற்கிடையில், பேச்சில் உடன்பாடு ஏற்பட்டு, நேற்று இரவு மெட்ரோ ரயில் ஊழியர்கள் போராட்டம் வாபஸ் பெறப்பட்டது.



■ மெட்ரோ ரயில் சேவை, நேற்று வழக்கம் போல் இயங்கியது.

### மூன்று பேர், 'சஸ்பெண்ட்'

சென்னையில், மெட்ரோ ரயில் ஊழியர்கள் எட்டு பேர், பணி நீக்கம் செய்யப்பட்டதால், போராட்டத்தில் குதித்தனர். இதனால், ரயில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

பிரச்னைக்கு தீர்வு காண, முத்தரப்பு பேச்சு, இரண்டாவது நாளாக நேற்றும் தொடர்ந்தது.

இந்நிலையில், நேற்று மேலும் மூன்று ஊழியர்கள், 'சஸ்பெண்ட்' செய்யப்பட்டதால், பிரச்னை பெரிதாகியுள்ளது.

கோயம்பேடில் உள்ள மெட்ரோ ரயில் கட்டுப்பாட்டு அறையில் பணி புரியும், மனோகரன், பிரேம்குமார், சிந்தியா ரோஷன் ஆகியோர், சிக்னல் சேவையை துண்டித்ததாக, நேற்று மாலை, 'சஸ்பெண்ட்' செய்யப்பட்டனர்.

இதனால், ஊழியர்கள் ஆத்திரம் அடைந்தனர். முத்தரப்பு பேச்சில், இந்த மூன்று பேர், 'சஸ்பெண்ட்' குறித்தும் பேசப்படும் என, தெரிவித்தனர்.